வெளியீடு எண்.34-2016 நாள்: 18.09.2016

**விழுப்புரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பாக கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தொடங்கி வைத்து, சமுதாய வளைகாப்பு மங்கல பொருட்களை கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கினார்.**

******

விழுப்புரம் VVA மீனாட்சி மஹாலில் இன்று (18.09.2016) சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் சார்பாக கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, சமுதாய வளைகாப்பு மங்கல பொருட்களை கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பெண்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, கருவுற்ற ஏழை எளிய கர்ப்பிணி தாய்மார்களுக்கும், வளைகாப்பு நடைபெற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் சமுதாய வளைகாப்பு விழா நடத்த ஆணையிட்டார்கள். அதன்படி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 23 திட்டங்களில் செயல்பட்டு வரும் 2938 அங்கன்வாடி மையங்களில் பயனடைகின்ற முதல் பிரசவ கால கர்ப்பிணிப் பெண்கள் 8160 பேருக்கு தலா ரூ.250/- வீதம் சமுதாய வளைகாப்பு மங்கலப்பொருட்கள், ஐந்து வகை உணவு மற்றும் ஆலோசனைப் புத்தம் ஆகியவை வழங்கிட ரூ.20.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய தினம் கர்ப்பிணிப்பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்வினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் இவ்விழாவானது நடத்தப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில், முதல் கட்டமாக விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கோலியனூர் மற்றும் விழுப்புரம் நகராட்சி பகுதியில் செயல்படும் 169 அங்கன்வாடி மையங்களில் பயனடைந்து வரும் 560 கர்ப்பிணி பெண்களுக்கு ரூ.1,40,000 செலவில் சமுதாய வளைகாப்பு நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணிப்பெண்களுக்கு மங்கல பொருட்கள், வளையல்கள், வெற்றிலை பாக்கு, கண்ணாடி மற்றும் பரிசு பொருட்கள் உள்ளிட்ட 11 வகையான சீதனப் பொருட்கள் மற்றும் 5 வகை ஆரோக்கிய உணவுகள் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படுகிறது.

இவ்விழாவில், 560 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு மங்கல பொருட்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கி விழா பேருரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராக பதவியேற்று, தொடர்ந்து 2வது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றவுடன் முதல் கையெழுத்திலேயே 5 வகை கோப்புகளில் கையெழுத்திட்டு, திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தாய்மார்களுக்கு பல்வேறு வகையான நலத்திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள்.

தாய்மார்களுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம், விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம், ஒவ்வொரு பேருந்து நிலையங்களிலும் தாய்மார்களுக்கென்று பாலூட்டும் தனி அறை, மகப்பேறு விடுப்பு காலம் 6 மாதத்திலிருந்து 9 மாதமாகவும், குழந்தை பிறந்தவுடன் அந்தந்த மருத்துவமனையிலேயே 16 வகை பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப்பெட்டகம் வழங்கும் திட்டம், டாக்டர்.முத்துலட்சுமி மகப்பேறு நலத்திட்டத்தின் மூலம் ரூ.12000-மும், மகளிருக்கென்று விலையில்லா சானிடெரி நேப்கின்கள் வழங்கும் திட்டம், சமூகநலத்துறையின் மூலம் 10 மற்றும் 12ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25,000, பட்டயம் பெற்ற பெண்களுக்கு ரூ.50,000 மற்றும் தாலிக்கு தலா 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கர்ப்பிணித்தாய்மார்கள் அங்கன்வாடியில் பதிவு செய்து தினந்தோறும் அவர்களது உடல் நிலையை கண்காணித்துக்கொள்ள வேண்டும் என்றும், இதுபோன்ற திட்டங்கள் தொடர்ந்து பெண்களுக்கு கிடைக்க மக்கள் என்றென்றும் இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சு.ராஜேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் திரு.சு.ராஜேந்திரன், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.ஜோதி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.அன்பழகி, ஒன்றியக்குழு தலைவர் திருமதி.விஜயாசுரேஷ்பாபு மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.